Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 58

வெள்ளிக்கிழமை
23 ஜனவரி 2026

தை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மாகாணத் தேர்தல் நடக்காது

கொழும்பு, ஜன. 23
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் என நம்பவில்லை என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். தனியார் ஊடகமொன்றில் »11

# தேசிய மருத்துவமனையாக தரமுயர்கிறது யாழ்.போதனா

### நாடாளுமன்ற மேற்பார்வைக்குழு தீர்மானம் நடவடிக்கைகளை விரைவுபடுத்த உத்தரவு

**யாழ்ப்பாணம், ஜனவரி 23**
**இலங்கையில் உள்ள மூன்று தேசிய மருத்துவமனைகளுக்கு அடுத்தபடியாக, நான்காவது தேசிய மருத்துவமனையாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைத் தரமுயர்த்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆளணி, சேவை விரிவாக்கம் என்பன துரிதகதியில் இடம்பெறவுள்ளன.** »11

தமிழர் தாயகத்தில்

## இனப்பரம்பலை மாற்றும் சதித்திட்டமே கிவுல்ஓயா!

### தமிழரசுக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 23
தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றும் தீய நோக்குடன் 'கிவுல் ஓயா' திட்டம் கொண்டுவரப்படுகின்றது. அந்தத் திட்டத்தைக் கைவிடாவிடில் மக்களைத் திரட்டி பெரும் போராட்டங்களை முன்னெடுப்போம் - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது. தமிழரசுக் கட்சியின் »11

## கிவுல்ஓயா திட்டம் தொடர்பில் இன்று ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23
வவுனியா வடக்குப் பிரதேசத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் முன்னெடுக்கப்படவுள்ள 'கிவுல் ஓயா' நீர்ப்பாசனத் திட்டம் தொடரில், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று விசேட ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.
கடந்த நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில், கிவுல் ஓயா நீர்த்தேக்கக் »11

## சட்டமா அதிபரை நீக்குவதா? அமைச்சரவை ஆராயவில்லை

### நீதியமைச்சர் விளக்கம்



கொழும்பு, ஜன. 23
சட்டமா அதிபரை பதவி நீக்குவது தொடர்பில் அமைச்சரவையில் எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்று நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- சட்டமா அதிபரைப் »11



## மோ.சைக்கிள்கள் விபத்து; மூன்று பேருக்குப் படுகாயம்

### குடத்தனையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 23
வடமராட்சி கிழக்கு குடத்தனையில் நேற்றுக் காலை இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் மூவர் படுகாயம் அடைந்துள்ளனர்.
மருதங்கேணி பிரதேச செயலகத்தின் கணக்காளர், மருதங்கேணி பிரதேச »11

இலங்கையின்

## விவசாயத்துறை மேம்பாடு; களமிறங்குகின்றது சீனா!


கொழும்பு, ஜன. 23
இலங்கையில் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.
சீன உயர்மட்ட அதிகாரிகளுக்கும், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல், ஜனாதிபதி »11

## செவ்வாய் வரை வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 23
வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென்கிழக்குத் திசையில் உருவாகியுள்ள சிறிய அளவிலான வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக, வடமாகாணத்தில் எதிர்வரும் 27ஆம் திகதிவரை மழை தொடரும் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார். »11

## விபத்தில் முதியவர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 23
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.
தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த கதிரன் ஐயாத்துரை (வயது-73) என்ற »11



## பணவீக்கம் அதிகரிப்பு!

விரிவு பக்கம்:-05

முச்சந்தி முரளி

"சூரனுக்கு கனக்க தலையள் மாதிரி உவையளும் நிலம்பிடிக்க இந்தமுறை கிவுல் ஓயா எண்ட போர்வையில வருகினம் கண்டியளோ"

## தமிழ் மக்களின் சுயாட்சியை உறுதிப்படுத்துவது அவசியம்

### முன்னாள் அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 23
தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வையும், சுயாட்சியையும் வழங்குவது மிகவும் அவசியம் என்று, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், இலங்கையில் நிலவும் நீண்டகால அரசியற் பிரச்சினைகள் தொடர்பில் ராஜித சேனாரத்ன கருத் »11

## ஆழியவளையில் கைக்குண்டு மீட்பு

## ஜெலி மீன் பட்டதால் சிகிச்சையில் மீனவர்!

விரிவுகள் பக்கம்:-03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிவுல் ஓயாத் திட்டத்தின் மூலம் தமிழரின் காணிகள் கபளீகரம்

## சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன.23**
**வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கிவுல் ஓயாத் திட்டத்தின் பெயரால் தமிழ் மக்களின் நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுகின்றன என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிவுல் ஓயாத் திட்டம் 2011ஆம் ஆண்டு திட்டமிட்டு நான்கு வருடங்களில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அது கிடப்பில் போடப்பட்டிருந்தது. தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்துக்கு 23 ஆயிரத்து 456 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் நீர்த்தேவையை நிவர்த்தி செய்யும் திட்டம் என்று கூறப்பட்டாலும், 1983ஆம் ஆண்டு வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றப் பகுதியான மகாவலி எல் வலயத்தின் நீர்த்தேவைக்காகவே இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகின்றது. மகாவலி எல் வலயம் 1964 1968 காலப்பகுதியில் திட்டமிடப்பட்டது. மகாவலி ஆற்றிலிருந்து நீரை வடமத்திய மாகாண கால்வாயினூடாக வழங்கத் திட்டமிடப்பட்டது. அது சாத்தியமற்றது என அறிந்திருந்தாலும் அவர்களது உள்நோக்கம் வடக்கு மாகாணத்தில் இனப்பரம்பலை மாற்றுவதற்காக குடியேற்றம் செய்வதாகவே இருந்தது. மகாவலி ஆற்றிலிருந்து நீரைக் கொண்டுவருவது சாத்தியமற்றதாக இருப்பதால் கிவுல் ஓயா நீர் விநியோகத்திட்டத்தை முன்மொழிவதாகச்சொல்லப்படுகிறது.

கிவுல் ஓயா திட்டத்தின் நீரேந்து பகுதியாகி பாதிக்கப்படும் வவுனியா வடக்கு பிரதேசத்துக்கு இந்தத் திட்டத்தின் ஊடாக எந்த விதப் பயனும் இல்லை. கிவுல் ஓயாத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனால் வவுனியா மாவட்டம் பல சவால்களைச் சந்திக்க நேரிடும் எனக் கருதுகிறேன். திட்ட நோக்கத்துக்காகப் பல ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்படப்போகிறன. இவற்றுள் இலங்கையில் எங்கும் காணப்படாத தாவர மற்றும் விலங்கு வகைகள் அழிவடைவதுடன் அருகிவரும் தாவர, விலங்கினங்களின் முழுமையான அழிவும் ஏற்படும் எனவும் காடுகளில் வாழும் குறித்த பிரதேசத்திற்கு உரித்தான தாவர மற்றும் விலங்கினங்கள் அழிவடையும் என இந்தத் திட்டத்துக்காகச் செய்யப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும் நீர்பாசனத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்கள மக்கள் மட்டும் குடியேற்றப்பட்டதை நீங்களும் தொடர விரும்புகிறீர்களா? கடந்தகால அரசுகளால் கொண்டுவரப்பட்ட சிறுபான்மை மக்களுக்குப் பாதகமான திட்டங்களைத் துளியளவேனும் சீர்தூக்கிப் பார்க்காமல் நடைமுறைப்படுத்த ஆயத்தமாவதை என்னவென்று சொல்வது? உங்கள் மனங்களில் தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற மனமாற்றம் வரும்வரை இந்த நாடு ஒருபோதும் உருப்படப் போவதில்லை-என்றார். (எ-110)



# நல்லிணக்கம் தொடர்பில் யாழில் அனுபவப்பகிர்வு

யாழ்ப்பாணம், ஜன.23
மாகாண மட்ட மதத்தலைவர்களுடனான நல்லிணக்கம் மற்றும் சமூக நீதி தொடர்பான அனுபவப்பகிர்வுக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. சொண்ட் நிறுவனம் மற்றும் தேசிய சமாதானப்பேரவை ஆகியவற்றின் இணை அனுசரணையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழுப்பணிப்பாளர் செந்தூர்ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சர்வ மதக் குருக்கள், சமூக மட்ட அமைப்பினர், சொண்ட் நிறுவனத்தினர், தேசிய சமாதானப்பேரவையினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)

# சட்டமா அதிபருக்கு எதிராக சமூக ஊடகங்களில் பதிவுகள்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

கொழும்பு, ஜன.23
சட்டமா அதிபரை இலக்குவைத்து அண்மைக்காலமாக சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் பதிவுகள் தொடர்பாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இந்தச் சமூக ஊடகப் பதிவுகள், சட்டமா அதிபர் அலுவலகத்தின் சுயாதீனத்தன்மையில் நியாயமற்ற முறையில் தலையிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்றும் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குற்றவியல் விவகாரங்களைப் பொறுத்தமட்டில், சட்டமா அதிபர் ஒரு பகுதியளவு நீதித்துறை சார்ந்த கடமையை ஆற்றுகிறார் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். விசாரணை அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில், ஒரு சந்தேகநபருக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதா அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதா என்பதை சட்டமா அதிபர் தீர்மானிக்கவேண்டும். நாட்டில் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு இன்றியமையாத சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட முக்கியமான நிறுவனங்களின் சுயாதீனத்தன்மையை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். நீதி மற்றும் சுதந்திரம் ஆகிய உன்னதக் கொள்கைகளைப் பாதுகாப்பதற்காக, சட்டமா அதிபர் அலுவலகத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் கண்ணியம் எப்போதும் பாதுகாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (எ-இ)

# இந்தியா செல்லவுள்ள நாமல் குழுவினர்

கொழும்பு, ஜன.23
இந்தியக் குடியரசு தின நிகழ்வுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட சில எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி இந்தியக் குடியரசு தினம் கொண்டாடப்படவுள்ளது. இந்தியாவுக்குச் செல்லவுள்ள எதிர்க்கட்சிக் குழுவினர் உலகில் மிகச் சிறந்த அனர்த்த முகாமைத்துவ நிலையமாகக் கருதப்படும் ஒடிசா அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கும் செல்லவுள்ளனர். விஜயன் காலத்திற்குரிய பௌத்த தொல்பொருள்களையும் பார்வையிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுப்பயணம் தொடர்பான கலந்துரையாடல், இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றுள்ளது. (எ-இ)



# சுவிஸ் நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர் துரைராஜா

கொழும்பு, ஜன.23
யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த சமூகநலச் செயற்பாட்டாளர் துரைராஜா ஜெயக்குமார், சுவிட்ஸர்லாந்தின் செங்காளன் நகரமன்றத் தலைவராக நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். 1988ஆம் ஆண்டு தனது 18 வது வயதில் அகதியாகச் சுவிட்ஸர்லாந்தில் காலடி வைத்த ஜெயக்குமார், 2011 இல் அந்நாட்டு குடியுரிமையைப் பெற்றார். 38 ஆண்டு காலப் பயணத்தில், தற்போது பசுமைக் கட்சி சார்பில் போட்டியிட்டு, அந்நகரின் மிக உயர்ந்த அரசியல் பதவியை அடைந்துள்ளார்.

நாடாளுமன்ற அவையில் நடைபெற்ற இந்தப் பதவியேற்பு விழாவில், அவர் திருக்குறளை மூன்று முறை தமிழ் மற்றும் டச்சு மொழிகளில் மொழிபெயர்த்து வாசித்தது அனைவரையும் நெகிழ்ச்சியடையச் செய்தது. தற்போது இவர் நகரில் வசிக்கும் அகதிகள், புலம்பெயர்ந்தோர் மற்றும் சமூகப் பாகுபாடுகளுக்கு [illegible] கொண்டுள்ளார். (ச-இ)

# சட்டவிரோதச் சொத்துச் சேர்ப்பு; 65 பேருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன.23
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் முறைகேடான விதத்தில் சொத்துகளை ஈட்டிய 65 சந்தேகநபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உதவி பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான எப்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போதைப்பொருள் வர்த்தகம், மோசடி உள்ளிட்ட குற்றச்செயல்களின் மூலம் முறையற்ற விதத்தில் ஈட்டப்படும் சொத்துகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த ஆண்டு முதல் சொத்துக்குவிப்புத் தொடர்பில் பொலிஸாரால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 65 சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் இவ்வாறான குற்றச்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர பொதுமக்கள் தொடர்ந்து தகவல்களை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் கடந்த ஆண்டில் 582 போதைப்பொருள் வழக்குகள்

## 547 பேர் கைது

**கிளிநொச்சி, ஜன.23**

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஹெரோய்ன், ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனைக்கு எதிராக பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கைகளில் கடந்த ஆண்டில் மாத்திரம் 582 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 547 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

இது தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள தரவுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 582 வழக்குகளுடன் தொடர்புடைய 547 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இவர்களில் 54 பேர் நீதிமன்றத் தடுப்புக் கட்டளையின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். ஹெரோய்ன் தொடர்பில் 209 வழக்குகளும், ஐஸ் போதைப்பொருள் தொடர்பாக 148 வழக்குகளும், கஞ்சா மற்றும் குஷ் போதைப்பொருள் தொடர்பில் 225 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கடந்த காலத் தரவுகளுடன் ஒப்பிடுகையில் போதைப்பொருள் தொடர்பான வழக்குகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

2023ஆம் ஆண்டில் 300 வழக்குகளும், 2024ஆம் ஆண்டில் 341 வழக்குகளும், கடந்த ஆண்டில் 582 வழக்குகளும் பதிவாகியுள்ளன-என்றுள்ளது. (ச-55)

# நுவரெலியாவில் 3.5 பாகை செல்சியஸ்

நுவரெலியா, ஜன.23

நாட்டில் குறைந்தபட்ச வெப்பநிலையாக நேற்று நுவரெலியாவில் 3.5 பாகை செல்சியஸாக பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பண்டாரவளையில் 11.5 பாகை செல்சியஸ் வெப்பநிலையும், பதுளையில் 15.1 பாகை செல்சியஸ் வெப்பநிலையும், கட்டுகஸ்தோட்டையில் 15.9 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளது.

அதிகபட்ச வெப்பநிலையாக முல்லைத்தீவில் 25.3 பாகை செல்சியஸ் வெப்பநிலையும், அம்பாந்தோட்டையில் 22 பாகை செல்சியஸ் வெப்பநிலையும், கொழும்பில் 22.1 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)



# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்டத்தில் மரக்கறி வகைகளின் விலைகள் தற்போது குறைவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. டித்வா புயல் மற்றும் மழை வெள்ளத்தால் மரக்கறிப் பயிர்கள் பாதிக்கப்பட்டு அழிவடைந்தன. அதனால் மரக்கறிவகைகளின் விலைகள் எகிறின.

இந்தநிலையில் தற்போது சீரான கால நிலையை அடுத்து மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர். இதனால் அவற்றின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது. திருநெல்வேலிச் சந்தையில் நேற்றைய நிலைவரப்படி, கத்திரிக்காய் கிலோ 300 ரூபாவாகவும், பாகல்காய் கிலோ 500 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 100 ரூபாவாகவும், கோவா கிலோ 200 ரூபாவாகவும், கரட் கிலோ 300 ரூபாவாகவும், தக்காளி கிலோ 500 ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 500 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

# ஆழியவளையில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

வடமராட்சிக் கிழக்கு, ஆழியவளை செம்மண் வீதிக்கு அருகாமையில் உள்ள சிறிய பற்றைக் காட்டுப் பகுதிக்குள் கைக்குண்டு நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

புலனாய்வுத் துறையினர் பாதுகாப்பான முறையில் கைக்குண்டை மீட்டு, மேலதிக விசாரணைகளுக்காக மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-27,66)



# ஜெலி மீன் தாக்குதலால் மீனவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜன.23

ஜெலி மீன் தாக்கியதில் கடுமையான உடல் நலப் பாதிப்புக்குள்ளான மீனவர் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியைச் சேர்ந்த மீனவரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில் ஜெலி மீன் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

தற்போது இந்த வகை ஜெலி மீன்கள் அதிகளவில் கடற்பரப்பில் காணப்படுவதனால் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் கடலில் குளிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. [illegible]




# எங்க போகுது எங்கட தலைமுறை?

தைப்பொங்கல் எண்டால் வாசல்ல கோலம் போட்டு, பானையில பால் பொங்கி, சனம் சந்தோசமா இருக்கிற ஒரு கொண்டாட்ட நாள். இந்த முறை தைப்பொங்கலண்டு பள்ளிக்கூடத்தில படிக்கிற பத்துப் பெடிப்பிள்ளையள், மோட்டார் சைக்கிளில வல்வெட்டித்துறையில நடந்த பட்டப்போட்டிக்குப் போயிருக்கினம். போன இடத்திலபக்குவமாப்பட்டத்தை ஏத்திறதைப்பார்க்கிறதை விட்டிட்டு, தங்களுக்கு வெறியை ஏத்தியிருக்கினம். ஒரு பெடிப்பிள்ளைக்கு வெறி எல்லை மீறிப்போக, ஓடிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலேயே 'வலிப்பு' வந்து அப்பிடியே றோட்டில விழுந்து பிரதட்டை அடிச்சிருக்கிறார். கை, கால், முகமெல்லாம் ஒரே ரத்தக் காயம்.

சுவடப்போன பெடியள் பயந்துபோய், இரவோடு இரவாக அவரைத் தூக்கிக்கொண்டு மந்திகை ஆஸ்பத்திரிக்குப் ஓடிப்போயிருக்கினம். இரவு நேரத்தில டியூட்டியில இருந்த டொக்டர், அடிபட்டு வந்த பெடியனுக்குத் தேவையான 'ட்ரீட்மெண்டைச்' செய்துபோட்டு, ஒரு தகப்பன் மாதிரி அந்தப் பெடியனுக்குப் புத்திமதி சொல்லியிருக்கிறார். "தம்பி.. அப்பா அம்மா இப்பிடிக் குடிச்சு வெறிக்கவோ உங்களை வளர்த்தவை? நீங்கள் குடிச்சிட்டு இப்பிடி றோட்டில விழுந்தால் அவையின்ர நிலைமை என்ன? எல்லாருக்கும் ஏன் கஷ்டத்தைக் குடுக்கிறியள்? இப்ப பார், உங்களால நாங்களும் பொங்கல் நாள் அதுவுமா குடும்பத்தைப் பிரிஞ்சு இந்த இரவில ட்ரீட்மெண்ட் செய்யிறதுக்காக இஞ்ச கஷ்டப்படுறமே" எண்டு அவர் அக்கறையாச் சொல்லப்போக, அந்தப் பெடியனுக்கு சுள்ளெண்டு கோபம் வந்திட்டுதாம்.

"இந்த வயசிலதானே 'ஃபன்' எடுக்கலாம்? அதால எங்கட வயசுக்கேத்த வேலையைச் செய்யிறம். நீங்கள் டொக்டர் எண்டால் இரவெண்டாலும் பகல் எண்டாலும் உங்கட டியூட்டியைப் பாக்கத்தானே வேணும். எனக்கு அட்வைஸ் பண்ணாமல் உங்கட அலுவலைப் பாருங்கோ" எண்டு அந்தப் பெடியன் திருப்பிக் கதைச்சிருக்கிறான். என்ன ஒரு திமிர்! வெறியில பிரண்டதால இரத்தக் காயத்தோட வந்தவனுக்கு, அந்த இரவு நேரத்திலையும் தன்ர கஷ்டத்தைப் பாராமல் ட்ரீட்மெண்ட் குடுத்த டொக்டருக்கு குடுக்கிற மரியாதை இதுதானோ? இப்ப இருக்கிற இளந்தலைமுறைக்கு எது 'ஃபன்' எண்டு தெரியாமல் போகுது. றோட்டில குடிச்சுட்டு விழுந்து கிடக்கிறதும், காப்பாத்த வந்த டொக்டரையே எதிர்க்கிறதும் தான் இவையின்ர 'ஃபன்' போல! படிப்புக்கும் மரியாதைக்கும் 'எட்டாப் பொருத்தம்' இருக்கும் வரைக்கும் எங்கட சமுதாயம் உருப்படப்போறதில்லை. அடுத்தவன் உயிரைப் பற்றிக் கவலையில்லாமல், உதவி செய்தவனையே எடுத்தெறிஞ்சு பேசுற இப்பிடியான புத்தி கொண்ட பெடியளுக்குக் காலம் நல்ல பாடம் படிப்பிக்கும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் வியாபாரங்களுக்கு பருத்தித்துறையில் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.23

பருத்தித்துறைப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நடமாடும் வியாபார நடவடிக்கையை ஒழுங்குபடுத்துவதற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பருத்தித்துறைப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அதிகளவில் நடமாடும் வியாபாரம் இடம்பெற்று வருகிறது. இதனால் நிலையான வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வருவோர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகள் மற்றும் கரவெட்டிப் பிரதேசசபை என்பன நடமாடும் வியாபாரத்தை தடைசெய்துள்ளன. இந்தநிலையில் வடமராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் வியாபாரத்தை முற்றாகத் தடைசெய்யும் வகையில் பருத்தித்துறைப் பிரதேசசபையிலும் தீர்மானத்தைக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினரால் கடந்த மாதம், பிரதேசசபைத் தவிசாளர், செயலாளர், உப தவிசாளர் ஆகியோரை நேரில் சந்தித்து வலியுறுத்தியதுடன் கடிதமும் வழங்கப்பட்டிருந்தது. குறித்த கடிதத்தின் அடிப்படையில், பருத்தித்துறைப் பிரதேசசபைக்குட்பட்ட இடங்களில் நடமாடும் வியாபாரத்தை நெறிப்படுத்தும் வகையில் குறித்த வியா பாரங்களை மேற்கொள்பவர்களை இனங்கண்டு சபையின் உரிய அனுமதி பெற அறிவுறுத்துமாறு வருமான பரிசோதகருக்கு பிரதேசசபைச் செயலாளரினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

# மாவை.சேனாதிராசாவின் முதலாவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஜன.23

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மற்றும் உருவச் சிலைத் திறப்பு விழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாவை சேனாதிராசாவின் நினைவாக அமைக்கப்பட்ட உருவச் சிலைத் திறப்பு விழா அன்றைய தினம் காலை 9 மணிக்கு மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

நினைவஞ்சலி நிகழ்வு யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும். செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதம அறங்காவலர் சா.செ.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சர் ந. நல்லுசாமி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

நினைவுப் பேருரையைத் தொடர்ந்து, முதலாம் ஆண்டு நினைவுமலர் மற்றும் பேராசிரியர் பாஞ்.இராமலிங்கம் எழுதிய 'ஈழ அண்ணல் சோ.மாவை சேனாதிராசா' நூல் வெளியீடு என்பன இடம்பெறும். (க-66)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 'கணித - விஞ்ஞானச் சமர்'

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவர்களிடையே கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களில் ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் விசேட மாதாந்தப் போட்டித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் தரம் 6, 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வலய மட்டத்திலான பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்தப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் நடத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி அமரர் மயிலுப்பிள்ளை ஞாபகார்த்த ஸ்கந்தாவின் கணிதச் சமர் மற்றும் கனடா பழையமாணவர் சங்க அனுசரணையுடன் ஸ்கந்தாவின் விஞ்ஞானச் சமர் என்பன இடம்பெறவுள்ளன.

அண்மையில் நடைபெற்ற பாடசாலைமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள்:

அமரர் மயிலுப்பிள்ளை ஞாபகார்த்த "ஸ்கந்தாவின் கணிதச் சமர்"

| இடம் | தரம் 9 | தரம் 10 | தரம் 11 |
|---|---|---|---|
| 1ம் இடம் | T. கதிர்சன் | S. லக்சிகன் | S. அரவிந்தன் |
| 2ம் இடம் | N. தனுஜன் | R. ருக்சாயினி | B. ஜதுவர்சன் |
| 3ம் இடம் | K. டினுஷன் | K. அட்சயன் | I. டனுஸ்ரிகா |

ஸ்கந்தாவின் "விஞ்ஞானச் சமர்"

| இடம் | தரம் 9 | தரம் 10 | தரம் 11 |
|---|---|---|---|
| 1ம் இடம் | R. தன்சிகா | J. மிஷானன் | R. பர்ணவி |
| 2ம் இடம் | T. கதிர்சன் | S. லக்சிகன் | A. அக்சயா |
| 3ம் இடம் | D. நிதிஸ் | K. மதுசூதனன் | B. ஜதுவர்சன் |

## கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜன.23

தென்மராட்சி - மீசாலை வடக்கில் அமைக்கப்பட்டுள்ள நளினி முன்பள்ளி மற்றும் நகுலன் சனசமூக நிலையம் ஆகியவற்றின் கட்டடத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சனசமூக நிலையத் தலைவர் மகாலிங்கம் மதுஷன் தலைமையில் இடம்பெறும். (க-100)

# மலேசிய வர்த்தக மாநாட்டில் யாழ்.பெண்ணுக்குப் பாராட்டு

கோலாலம்பூர், ஜன.23

தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச தமிழர்கள் வர்த்தக மாநாட்டில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கைத்தொழில் முயற்சியாளரின் உற்பத்திப் பொருள்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கப்பெற்றன.



இந்த மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

இலங்கையிருந்து 12 சிறுதொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றினர். யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆனைக்கோட்டைக் கிராமத்தின் சிறுதொழில் முயற்சியாளர் திருமதி சிவராசா மரியறோசரி சென்றிருந்தார்.

இவர் பிரதேசத்துக்குரித்தான பனைசார் உற்பத்திகள் மற்றும் ஏனைய உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தி, விளக்கமளித்து அனைவரதும் ஆதரவையும் பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டார். (க-27)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஓரளவு அனுகூலம் உண்டு. வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லவும்.

**சிம்மம்:** வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைக் காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் செல்ல நேரிடும்.

**மீனம்:** அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சட்டங்களும் திட்டங்களும்

“அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வகையில், மக்களைப் பாதிக்கும் விதமாக சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களைக் கட்டுப்படுத்து வதற்குப் பொருத்தமான சட்டங்கள் இயற்றப்படவேண்டும்” என ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். இன்றைய நவீன உலகில், சமூக ஊடகங்கள் மக்களின் அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாகவே மாறிவிட்டன. தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும், ஏன் அரசாங்கங்களை உருவாக்குவதிலும் வீழ்த்துவதிலும்கூட சமூக ஊடகங்களின் பங்கு அளப்பரியது. மறுபுறத்தில் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள் அண்மைக்காலங்களில் பல்கிப் பெருகியுள்ளன என்பதை எவரும் மறுக்கமுடியாது. ‘ஒன்லைன்’ மூலமான நிதி மோசடிகள், தனிநபர் அந்தரங்கத் தாக்குதல்கள், வெறுப்புப் பேச்சுகள் மற்றும் போலியான தகவல்களைப் பரப்பி சமூகக் கட்டமைப்பைச் சிதைக்கும் முயற்சிகள் எனப் பல வடிவங்களில் சமூக ஊடகங்கள் தவறாகப் பயன் படுத்தப்படுகின்றன. இவ்வாறான குற்றங்களைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கும் தற்போதைய சட்டக் கட்டமைப்பில் போதுமான ஏற்பாடுகள் இல்லை என்பது உண்மையே. அந்தவகையில், சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவது காலத்தின் கட்டாயமாகும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆனால் இந்த ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை என்பது மிகக் கவனமாகக் கையாளப்பட வேண்டியதொரு விவகாரமாகும். சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அல்லது ஒழுங்குபடுத்தும் செயற்பாடானது, ஒரு மெல்லிய கயிற்றின் மீது நடப்பதைப் போன்றது. இதில் ஏற்படும் மிகச் சிறிய சறுக்கல் கூட, ஜனநாயகத்தின் அடிப்படைத் தூணான கருத்துரிமையை நசுக்கும் செயற்பாடாக மாறிவிடும் அபாயம் உள்ளது. இலங்கையின் கடந்த கால வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும்போது, ஊடகக் கட்டுப்பாடுகள் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் பலவும், இறுதியில் அரசாங்கத்துக்கு எதிரான குரல்களை ஒடுக்குவதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் காணமுடிகிறது. அரசாங்கம் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்களை இயற்றும்போது, அது மோசடிகளையும் குற்றங்களையும் தடுப்பதாக மட்டுமே அமையவேண்டுமே தவிர, அரசியல் பழிவாங்கல்களுக்கோ அல்லது கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கோ வழிவகுக்கக்கூடாது.

அண்மையில் இலங்கையில் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட முடிவுகள், எத்தகைய குழப்பங்களையும் நடைமுறைச் சிக்கல்களையும் தோற்றுவித்தன என்பதை அனைவரும் அறிவோம். போதிய திட்டமிடல் இன்றி, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசிக்காமல் மேற்கொள்ளப்பட்ட அந்த மாற்றங்கள், இறுதியில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளின. அதேபோன்றதொரு நிலைமை சமூக ஊடக ஒழுங்குப்படுத்தலிலும் ஏற்படக்கூடாது. சமூகவலைத்தளங்களில் இடம்பெறும் மோசடிகளைக் கட்டுப்படுத்தச் சட்டம் தேவை என்பது ஏற்புடையதே. ஆனால், அந்தச் சட்டம் மக்களைப் பாதுகாக்கும் கேடயமாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களின் வாயை மூடும் பூட்டாக மாறிவிடக்கூடாது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு**

**பொருள்:** பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.



# கல்விச் சீரமைப்பு நடவடிக்கையில் விரிவுரையாளர்கள் கொண்ட குழு

ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.23**
**கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும்போது பல்கலைக் கழக விரிவுரையாளர்களை உள்ளடக்கிய நிபுணர்களைக் கொண்ட பொறிமுறை நிறுவப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்துடன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-
தற்போதுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி, தேசிய கல்வி நிறுவகத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பின் மூலம், கல்வி மறுசீரமைப்புகளை செயற்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கல்வி மறுசீரமைப்புகளில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி தலைமையிலான அரசு எடுத்த முடிவைப் பாராட்டுவதாகவும், அதற்காக தமது ஆதரவினை வழங்கத் தயாராக இருப்பதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, பல்கலைக் கழகக் கட்டமைப்பில் விரிவுரையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் உள்ளிட்ட பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## மதவாச்சியில் துப்பாக்கிச்சூடு; விவசாயி பலி!


அநுராதபுரம், ஜன.23
அநுராதபுரத்தில் மதவாச்சி - கரம்பன்குளம் வனப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
உயிரிழந்தவர் மதவாச்சி துமின்னேகம பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## 5 புதிய அரசியல் கட்சிகள் ஆணைக்குழு அங்கீகாரம்!

கொழும்பு,ஜன.23
தேர்தல்கள் ஆணைக் குழுவினால் ஐந்து புதிய அரசியற்கட்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
சோசலிச மக்கள் முன்னணி, மக்கள் பங்கேற்பு ஜனநாயக முன்னணி, மலையக அரசியல் அரங்கம், சமத்துவக் கட்சி, புரட்சிகர மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கே புதிதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இலங்கையில் அரசியற்கட்சிகளின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)

## கண்டியில் மர்மக்கல் ; சாதாரணமானதே!

கண்டி, கலஹா பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மர்மக்கல், சந்தை மதிப்பில்லாத சாதாரண வகையைச் சேர்ந்தது எனத் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தக் கல் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்ட அதிகாரிகள், இது உயர்தர வணிக அல்லது சந்தை மதிப்பைக் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். (ச)



# பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.23
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி டிசெம்பர் மாதத்தில் பணவீக்கம் அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த நவம்பர் மாதம் 2.4% ஆகக் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கம் டிசெம்பர் மாதத்தில் 2.9% ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை நவம்பர்மாதம் 3.6% ஆகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் டிசெம்பர் மாதத்தில் 4.4% ஆக உயர்ந்துள்ளது. (ச-இ)

நாளை
சனிக்கிழமை - தை 10
24.01.2026
சுபநேரம் : 03.36 - 05.06
ராகுகாலம் : 09.36 - 11.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு பிரிட்டன் அரசு கைகொடுக்கும்

## பிரிட்டன் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

**பிரிட்டனில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் வழங்கப்படும் என்று பிரிட்டன் தூதுவர் ஆன்ட்ரூ பற்றிக் தெரிவித்தார். யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனை, மாவட்டச் செயலகத்தில் பிரிட்டன் தூதுவர் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.**

இந்தச் சந்திப்பில் டித்வா புயலின் பின்னர், யாழ்.மாவட்டத்தின் நிலைவரங்கள், மாவட்டத்தின் தற்போதைய சமூக, பொருளாதார முன்னேற்ற நிலைமைகள், காங்கேசன்துறை முதலீட்டு வலயம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் போன்ற விடயங்களை மாவட்டச் செயலரிடம், தூதுவர் கேட்டறிந்தார். இதற்கு யாழ். மாவட்டச் செயலர், டித்வா புயல் காரணமாக யாழ். மாவட்டத்தில் 20 ஆயிரத்து 23 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக 13 ஆயிரத்து 168 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 15 ஆயிரத்து 260 பாடசாலை மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. சேதமடைந்த வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதேவேளை மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மிகவும் அத்தியாவசியமாகவுள்ளது. தகவல் தொழில்நுட்பம், உற்பத்தித்திறன் ஆகியவற்றில் எமது இளைஞர்கள் அதிகம் திறமை பெற்றுள்ளனர். பொருத்தமான வேலைவாய்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் மாவட்டம் மற்றும் நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடையும் என்றும் சுட்டிக்காட்டினார். இவற்றுக்குப் பதிலளித்த தூதுவர் பிரிட்டனில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வர். அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும். ஏனைய அபிவிருத்திட்டங்களுக்கும் கைகொடுப்போம்-என்றார். (க-66)

# புனரமைப்பதற்கு இடையூறாக வீதியை ஆக்கிரமிக்கும் வேலி

முல்லைத்தீவு,ஜன.23

ஏ -35 பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் இருந்து செல்லும் ஒலிம்பிக் வீதியின் இருபக்கங்களையும் தனிநபர் ஆக்கிரமித்து, வேலி அமைத்துள்ளதால், புனரமைப்புப் பணிகளுக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கோம்பாவில் கிராமத்துக்கான பிரதான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் குறித்த வீதியை, ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பயன்படுத்துகின்றன. இந்த வீதியில் கோம்பாவில் கிராமத்திலிருந்து செல்லும் ஒரு பகுதி 2019ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட போதும், எஞ்சிய பகுதி இதுவரை புனரமைக்கப்படவில்லை. குறித்த வீதியை தனிநபர் ஆக்கிரமித்துள்ளதால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதுதொடர்பாக ஏற்கனவே பிரதேச செயலர் மற்றும் பிரதேசசபையினருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தற்போதும் குறித்த வீதியில் வெள்ளம்தேங்கியுள்ளது. இதனால்போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-55)



# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு நாய்க்கான ஊசிக்கட்டணமாக ரூ.100 அறவிடப்படும்.

இன்று வெள்ளிக்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை ஆடியபாதம் வீதி வாலையம்மன் கோவிலடி, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி, பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை செல்லர் வீதி சிறுவர் இல்லம் அருகாமை, நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை நடமாடும் சேவை.

26ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை காசிப்பிள்ளை பாடசாலை அருகாமை, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி, பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை ஜமுனா வீதி

27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை செட்டியார் தோட்டம், மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை கொண்டலடிச் சந்தி

28ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை யாக்கோபு பாலர் பாடசாலை, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை குமார வீதி, பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை சங்கிலியன் வீதி

29ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை நல்லூர் குறுக்கு வீதி, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை செட்டித்தெரு நல்லூர், பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை கைலாச பிள்ளையார் கோவிலடி

30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை கோவில் வீதி இந்துமாமன்றம் ஒழுங்கை, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை வைமன் வீதி, பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை துர்க்கா மணி மண்டபம்

31ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.11மணி முதல் மு.ப.1மணி வரை நடமாடும் சேவை

2ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை பருத்தித்துறை வீதி 4ஆம் ஒழுங்கை, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை பருத்தித்துறை வீதி நாவலர் கல்வி நிலையம், பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை நாவலர் வீதி ஆனைப்பந்திச் சந்தி 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை ஜனசக்தி சனசமூக நிலையம் அரசடி வீதி, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம், பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை சிவன புது வீதி 5ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை சிவன் அமன் கோவிலடி, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை மணல்தாரை வீதி, பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை பலாலி வீதி ஆலடிச்சந்தி 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.9மணி முதல் மு.ப.11மணி வரை அரசடி 5ஆம் ஒழுங்கை, மு.ப.11மணி முதல் பி.ப.1மணி வரை பலாலி வீதி ஜே/103 கி.சே. அலுவலகம், பி.ப.2.30மணி முதல் பி.ப.4மணி வரை அம்மன் வீதி நல்லூர் ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படும். (ச-41)

# விகாரையை நாமே கட்டித்தரலாம் எமது காணிகளைத் திருப்பித் தருக!

## மக்கள் எழுச்சிக் கட்சி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 23

நாங்கள் தையிட்டி விகாரையை எதிர்க்கவில்லை. ஆனால், மக்களின் பூர்வீகக் காணிகளைச் சட்டவிரோதமாகக் கையகப்படுத்தி விகாரை அமைக்கப்பட்டுள்ளதையே எதிர்க்கிறோம். விகாரைக்குரிய காணியில் விகாரையை அமைப்பதென்றால் அதனை நாமே கட்டிக்கொடுக்கத் தயாராக உள்ளோம். முதலில் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படையுங்கள். இவ்வாறு அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் செயலாளர் நாயகம் அருள் ஜெயந்திரன் அண்மையில் ஊடகச்சந்திப்பொன்றை நடத்தித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்கில் எவ்வித பாதுகாப்பும் இன்றி அச்சமின்றித் தனியாக நடந்துசெல்ல முடியுமான சூழல் இருக்கும்போது. இன்னும் எதற்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீடிக்கிறது? ஆட்சிக்கு வரும்போது அநுர அரசு வழங்கிய வாக்குறுதிகள் தற்போது காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

திஸ்ஸ விகாரை மற்றும் செம்மணி விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதாகக் கூறப்பட்ட வாக்குறுதிகள் என்னவானது?

இனவாதத்தைத் தூண்டும் செயல்களைத் தடுக்க நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்ற அரசு முன்வரவேண்டும். தேர்தல் காலத்தில் கூறிய விடயங்களுக்கும், தற்போது நடக்கும் செயற்பாடுகளுக்கும் இடையில் பெரும் முரண்பாடு உள்ளது-என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளில் நெரிசலைக் குறைப்பதற்கு தண்டனைக்கால மாற்றப்பொறிமுறை

## 10 பேர் கொண்ட குழு நியமனம்

கொழும்பு, ஜன.23

சிறைச்சாலை நெரிசலைக் குறைப்பதற்காக தண்டனைக் கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைக்கும் பொறிமுறையை உருவாக்குவதற்காக 10 பேரை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சிறைச்சாலை நெரிசலை குறைப்பது தொடர்பில் ஆராய மீளாய்வு முறை நடவடிக்கை ஊடாக தண்டனைக் காலத்தை குறைக்கும் பொறிமுறையை உருவாக்குவதற்கான யோசனை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது.

அமைச்சரவையின் அனுமதியைத் தொடர்ந்து சிறப்புக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற நெரிசலைக் குறைப்பதற்கு இந்த குழு இதுவரையில் பரிந்துரைகளை முன்வைக்க வில்லை. பரிந்துரைகள் கிடைத்ததும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (எ-இ)



# குறைத்து மதிப்பிடப்படும் பெண்களின் ஆளுமைகள்

## பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

பேர்ன், ஜன.23

உலகளவில் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகத் தளங்களில் பெண்கள் தங்களின் ஆளுமையை அதிகரித்துக்கொண்ட போதும், அவர்களின் பங்களிப்புகள் ஊதியமற்ற பராமரிப்புப் பணிகள், முறைசாரா உழைப்பு, விவசாயத்துறை போன்றவற்றில் தொடர்ந்து திட்டமிட்டுக் குறைத்து மதிப்பிடப்படுகின்றது என்று இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற 'மாறிவரும் உலக ஒழுங்கை வழிநடத்தும் பெண்கள்' எனும் தொனிப்பொருளிலான உயர்மட்ட மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முடிவெடுக்கும் அதிகார மையங்களில் இருந்து பெண்கள் விலக்கிவைக்கப்படுவது தற்செயலானது அல்ல; அது பாலின அடிப்படையிலான அதிகாரப் படிநிலைகள் மூலம் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும். தலைமைத்துவத்தில் இருக்கும் பெண்கள் மீது நடத்தப்படும் வசைபாடல்கள், தனிப்பட்ட நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தல் மற்றும் திட்டமிட்ட ஓரங்கட்டப்படுதல் போன்ற செயற்பாடுகள், திறமையான பெண்களை அரசியலில் இருந்து பின்வாங்கச் செய்கின்றன. இது ஆணாதிக்கக் கட்டமைப்புகளை மேலும் பலப்படுத்துகின்றது. இந்தத் தடைகளைத் தகர்ப்பது என்பது பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது மாத்திரமல்ல; மாறாக நிறுவனங்களையும் அதிகாரக் கட்டமைப்புகளையும் மாற்றுவதாகும். பெண்கள் தன்னாட்சி மற்றும் அதிகாரத்துடன் நம்பிக்கையோடு தலைமை தாங்குவதற்கு ஏற்ற சூழலை நாம் உருவாக்கவேண்டும்-என்றார். (எ-இ)

# கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் நாடளாவிய பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜன.23

மாளிகாவத்தை சிறுநீரக மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளரின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் உள்ள அரச மருத்துவமனைகளில் கடமையாற்றும் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். மாளிகாவத்தை சிறுநீரக மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர், அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி பெரும் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார் என்று அரச கதிரியல் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. தகுதியான அதிகாரிகள் உள்ளபோதும், கதிரியக்கப் பிரிவின் பொறுப்பதிகாரிக்குத் தெரியாமல் வெளியாள்களைக் கொண்டு கதிரியல் பரிசோதனைகளை முன்னெடுத்தமை, அரச சொத்துகளை ஆபத்துக்குள்ளாக்கியமை மற்றும் அம்புலன்ஸ்களை தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தியமை போன்ற 8 பிரதான குற்றச்சாட்டுகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)

# உப அலுவலகத்தை மூடுவதற்கு நல்லூர் பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.23

நல்லூர் பிரதேசசபையின் நல்லூர் மற்றும் கொக்குவில் உப அலுவலகங்கள் நல்லூர் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படவுள்ளன என்று பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி மீளாய்வு தொடர்பாக திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாகவும், தேவையற்ற நிர்வாகச் செலவுகளைக் குறைத்து நல்லூர் பிரதேசசபையின் ஆளணிகளை ஒருங்கிணைத்து வினைத்திறனான சேவையை ஒரே கூரையின் கீழ் வழங்கும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்வரும் 9ஆம் திகதி முதல் நல்லூர் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படும். இந்த வருட நடுப்பகுதியில் கொக்குவில் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படும்.

உப அலுவலகங்கள் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட பின்னர் சோலை வரி மற்றும் வருமானப் பகுதி, கட்டுமானத்துக்கான அனுமதி வழங்கும் பகுதி, பொதுமக்கள் முறைப்பாட்டுப் பகுதி போன்ற புதிய கிளைகள் தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்படும்.

உப அலுவலகங்கள் இயங்கிய கட்டடங்கள் ஆயுள்வேத வைத்தியசாலைகளாகவும், சபையின் சுயவருமானத்தை அதிகரிக்கும் வகையிலும் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையிலும் சுயதொழில் ஊக்குவிப்புத் தொழில் மையங்களாகவும் மாற்றப்படும்.

செயலமர்வுகளுக்கு வாடகைக்கும் வழங்கப்படும்-என்றார். (எ-26,27,66)



# தகவல் தொழில்நுட்பம் விழிப்புணர்வுப் பயிற்சி

வவுனியா,ஜன.23

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சிப்பட்டறை, வவுனியா தனியார் விருந்தினர் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இணையப்பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கருவிகளின் பயன்பாடு தொடர்பில் இதில் விளக்கமளிக்கப்பட்டது. வளவாளர்களாக கிறிசலிஸ் நிறுவனத்தின் பயிற்றுநர்கள், சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் பிரகாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். கிறிசலிஸ் நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் வவுனியா மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் இதில் பங்கேற்றனர். (க-18)

# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.23

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் பாடசாலையில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கான தொழில் திறவுகோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதேச செயலர் எஸ்.சீ.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திறன்விருத்தி உத்தியோகத்தர்,சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை



யாழ்ப்பாணம், ஜன.23
யாழ்ப்பாணம் சிறைச்சாலையினரின் மாபெரும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ். சிறைச்சாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இந்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. (ச-100)


## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் இருந்து 100m தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு. அறைகள் குறுகிய காலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
**076 363 5249**

(CS/31030) J-1


## தேசிய அடையாள அட்டை தொலைந்துவிட்டது

திருமதி கீரா ஜெயசீலன் ஆகிய என்னுடைய தேசிய அடையாள அட்டை No (735120794V) 16.01.2026 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. இதனைக் கண்டெடுத்தவர்கள் என்னுடைய கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தந்துதவுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**முகவரி :** இல - 40
நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு:
**075 3341 428**

(CS 60628) E

## வலயக் கல்வி அலுவலகம் - தீவகம்
### அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடம் ஏற்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | யா/புங்குடுதீவு றோ.க.த.க பாடசாலை | Type - III | 2026.01.01 |
| | **மீள் விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்** | | |
| 01 | யா/சுருவில் றோ.க.த.க பாடசாலை | Type - III | 2025.10.30 |
| 02 | யா/தம்பாட்டி அ.த.க வித்தியாலயம் | Type - II | 2025.11.13 |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்
- Type - II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் - II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம் - II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத விடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம்பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் - III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
- Type - III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பிரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2026.02.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம்,குறிகட்டுவான் வீதி, வேலணை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தி.ஞானசுந்தரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**தீவகம்.**

(CR 46942) E

## Jaffna College Alumni Association
### Annual General Meeting

The Annual General Meeting of the Jaffna College Alumni Association will be held on **Saturday, the 07th of February 2026 at 9.30 a.m. in Ottley Hall, Jaffna College.**

There will be a worship service at the JDCSI Cathedral at Vaddukoddai at 9 a.m. prior to the meeting.

All members are requested to attend the meeting.

**Mr. G. Gokilaramanan**
**Secretary, Jaffna College Alumni Association**
**23 January 2026**

(CS 60620) E

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
15 . 12 . 1953

மறைவு
24 . 12 . 2025



**பெரியபுலோ சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலை தெற்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட**

## அமரர் நாகன் சரவணமுத்து

**அவர்கள் கடந்த 24.12.2025 காலமானார்.**

சுழிபுரம் பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையத்தின் பொருளாளராகவும் மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் முத்துக்கு முத்தான முதன்மைப் பணிகள் செய்து அண்ணா முத்தமிழ் கலைக்கலா நாடக மன்றத்தின் மூத்த முதன்மைக் கலைஞராகவும் வசந்தம் வானொலியின் அபிமான நேயராகவும் பங்குபற்றினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பெரியபுலோ சுழிபுரம்**
**077 361 9568**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
[illegible]

(CS 60523) E

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA
### INVITATION FOR BIDS (IFB)
### STILL PHOTOGRAPHY FOR 40th ANNUAL GENERAL CONVOCATION – 2026

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography to cover 40th Annual General Convocation - 2026 of the University of Jaffna which is scheduled to be held on 19th, 20th, 21st and 22nd of February, 2026.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five-year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the Finance Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 9.00 a.m. to 3.00 p.m. Contact number: 021 2216519/ 0773095966/ 0776186358
4. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Senior Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna From 23rd January 2026 to 05th February 2026 from 9.00 a.m. to 3.00 p.m upon payment of a non- refundable fee of Rupees thousand (Rs.1000/-) to be deposited to the Peoples Bank, University of Jaffna with the Reference No **"97000006000276"** should be filled in the Account Number column in the Deposit Slip.
5. Bidding document and other details will be available in the University website www.jfn.ac.lk.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Bursar Finance Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Finance Branch to reach on or before 10.00 am on 06th February 2026. Bids will be opened soon after closing at 10.00 am on 06th February 2026 at the Finance Branch in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 49 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna"
   - For an amount of Rs. 20,000/=
   - Issued by one of the agencies (Banks) acceptable to the client.
9. Pre-Bid meeting will be held on 30th January, 2026 at 10.00 am in the Finance Branch, University of Jaffna.

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna**
**23.01.2026**

(CR 46927) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்ரம்ப் போட்ட வரிகளால் எகிறிய தங்கம், வெள்ளி

வொஷிங்டன், ஜன.23

சர்வதேச சந்தையில் நிலவும் பொருளாதார பதற்றங்கள் காரணமாக, தங்கம் மற்றும் வெள்ளி விலைகள் முன்னெப்போதும் இல்லாத வரலாற்று உச்சத்தைத் தொட்டுள்ளன.

உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தகப் போர் அச்சம் காரணமாக, பாதுகாப்பான முதலீடாகக் கருதப்படும் தங்கம் மற்றும் வெள்ளியின் தேவை சர்வதேச அளவில் அதிகரித்துள்ளது. ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 4,689 டொலராக உயர்ந்துள்ளது. இது வரலாற்றிலேயே மிக உயர்ந்த விலையாகக் கருதப்படுகிறது.

வெள்ளியின் விலையும் தடாலடியாக உயர்ந்து, ஒரு அவுன்ஸ் 94 டொலர் என்ற புதிய இலக்கை எட்டியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஐரோப்பிய தயாரிப்புகள் மீது 200% வரி விதிப்பதாக விடுத்துள்ள மிரட்டல், உலகளாவிய வர்த்தகத்தில் நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளது. (ச)

## மக்கள் தொகை சீனாவில் வீழ்ச்சி


பீஜிங், ஜன.23

உலகில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாகத் திகழ்ந்த சீனாவில் பிறப்பு விகிதம் வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டை விட 2025இல் சீனாவின் பிறப்பு விகிதம் 17 வீதம் குறைந்துள்ளது.

2025 இல் 7.92 மில்லியன் குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளன. இது 2024ஐ விட 1.62 மில்லியன் குறைவாகும். ஒட்டுமொத்த மக்கள் தொகையில் கடந்த ஓராண்டில் மட்டும் 3 மில்லியன் மக்கள் குறைந்துள்ளனர். சீனா தனது மக்கள்தொகையை குறைக்கப் பல தசாப்தங்களாகப் பின்பற்றிய "ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை" என்ற விதியை 2015இல் நீக்கியது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு அரசு பல்வேறு நிதிச் சலுகைகளை அறிவித்தது.

இத்தனை சலுகைகள் அளித்தும் சீன இளைஞர்கள் மத்தியில் குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆர்வம் அதிகரிக்கவில்லை. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் சமூக மாற்றங்களே இதற்கு முக்கியமான காரணங்களாகக் கருதப்படுகின்றன. (ச)





## விடைபெறுகிறார் சாய்னா

சென்னை, ஜன.23

இந்தியப் பட்மின்டன் விளையாட்டை உலகத்தரத்துக்கு உயர்த்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், தனது ஓய்வு முடிவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே தான் விளையாடுவதை நிறுத்திவிட்டதாகக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் என் விருப்பப்படி விளையாட்டில் நுழைந்தேன், என் விருப்பப்படியே வெளியேறுகிறேன். என் மூட்டுவலி இப்போது எதற்கும் ஒத்துழைக்கவில்லை. முன்பு உலக அளவில் ஜொலிக்க 8 முதல் 9 மணிநேரம் பயிற்சி செய்வோம். இப்போது 1 அல்லது 2 மணி நேரத்திலேயே என் மூட்டு வீங்கி விடுகிறது. இதற்கு மேல் என்னால் முயற்சி செய்யமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

2016 ரியோ ஒலிம்பிக்கில் நடைபெற்ற விளையாட்டின்போது ஏற்பட்ட மூட்டுக் காயமே அவரது விளையாட்டு வாழ்க்கையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

காயங்களுக்கு மத்தியிலும் 2017 உலக சாம்பியன்ஷிப்பில் வெண்கலமும், 2018 கொமன்வெல்த்தில் தங்கமும் வென்றார்.

2012 லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்று, பட்மின்டனில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற வரலாற்றை இவர் படைத்தார். 2023 சிங்கப்பூர் ஓபன் தொடரே அவர் பங்கேற்ற கடைசி சர்வதேசப் போட்டியாகும். (ச-இ)

## நிலவுக்குச் செல்லும் ஆர்டெமிஸ் -2



வொஷிங்டன், ஜன.23

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மனிதர்களை நிலவுக்கு அழைத்துச் செல்லும் நாசாவின் பிரமாண்டத் திட்டமான ஆர்டெமிஸ் -2, தற்போது தனது இறுதிக்கட்டத் தயாரிப்புகளை எட்டியுள்ளது.

1972 இல் அப்பல்லோ -17 திட்டத்துக்குப் பிறகு, மனிதர்கள் நிலவை நோக்கிப் பயணம் செய்யும் முதல் விண்வெளித் திட்டம் இதுவாகும்.

இந்தத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரியில் விண்ணில் ஏவப்படத் தயாராக உள்ளது.

இந்த விண்கலம் நிலவைச் சுற்றி வந்து பூமியில் பாதுகாப்பாகத் தரையிறங்கும். சுமார் 10 நாள்கள் நீடிக்கும் இந்தப் பயணம், மனிதர்கள் விண்வெளியில் நீண்ட காலம் தங்குவதற்கான தொழில்நுட்பங்களைச் சோதிக்கும். இந்தப் பயணம் வெற்றியடைந்தால், அடுத்த கட்டமான 'ஆர்டெமிஸ் -3' திட்டத்தின் மூலம் மனிதர்கள் நிலவின் தென் துருவத்தில் நேரடியாகத் தரையிறங்குவார்கள். (ச-இ)



## காபூலில் குண்டுவெடிப்பு; ஐ.எஸ்.ஐ.எஸ் பொறுப்பேற்பு

காபூல், ஜன.23

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள சீன உணவகம் ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (ச)

## டென்னிஸ் ஜாம்பவான் ஜோகோவிச் மைல்கல்

மெல்போர்ன், ஜன.23

டென்னிஸ் உலகின் ஜாம்பவான் நோவக் ஜோகோவிச் இன்று மெல்போர்ன் நகரில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் தனது 100வது வெற்றியைப் பதிவு செய்து புதிய உலக சாதனை படைத்துள்ளார். அவுஸ்திரேலிய ஓபன் வரலாற்றில் 100 வெற்றிகளைப் பெற்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையை ஜோகோவிச் பெற்றுள்ளார். முன்னதாக ரோஜர் பெடரர் 102 வெற்றிகளைப் பெற்றிருந்தார். அவுஸ்திரேலிய ஓபனில் ஜோகோவிச் இதுவரை 10 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இந்த 100ஆவது வெற்றி அவரது "மெல்போர்ன் ராஜா" என்ற பட்டத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானத் திடலாக மாறும் மண்டைதீவுச் சுற்றுலாத்தளம்

## மக்கள் வரிப்பணம் வீண்! பிரதேசசபையில் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம்,ஜன.23**

**பல மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மண்டைதீவுச் சுற்றுலாத் தளம், தற்போது முறையான பராமரிப்பின்றி சமூகச் சீரழிவுக்கான இடமாக மாறி வருவதாக வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் சுட்டிக்காட்டியுள்ளார். வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், 2016ஆம் ஆண்டு சுமார் 77 மில்லியன் ரூபா செலவில் வேலணையின் அபிவிருத்தி மற்றும் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் இந்த மையம் உருவாக்கப்பட்டது. ஆனால், சரியான பராமரிப்பு மற்றும் வருவாய் ஈட்டும் பொறிமுறை இல்லாததால் இந்தத் திட்டம் முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது. சுற்றுலாவுக்காக கொள்வனவு செய்யப்பட்ட படகுகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் அனைத்தும் தற்போது பயன்பாடற்ற வகையில் சேதமடைந்துள்ளன. பல பெறுமதியான பொருள்கள் அங்கிருந்து சூறையாடப்பட்டுள்ளன. இந்தச் சுற்றுலா மையம் தற்போது பலரும் கூடி மது அருந்தும் இடமாக மாறியுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் சமூகச் சீரழிவுகள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. சபைக்கான வருமானத்தை இழந்து, வெறும் பாழடைந்த கட்டடமாக மாறியுள்ள இந்த மையத்தை மீண்டும் புனரமைக்கவேண்டும். அத்துடன், சமூகச் சீரழிவைத் தடுத்து, இழந்த வருமானத்தை மீட்டெடுக்க பிரதேசசபை உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (சு-27)

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 06 . 1937



உதிர்வு 05 . 01 . 2026

### திருமதி.மாணிக்கம் கதிராசி

நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டவிலை வசிப்பிடமாக கொண்ட **திருமதி.மாணிக்கம் கதிராசி** அவர்கள் 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனாடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் மாணிக்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகன் - வள்ளிப்பிள்ளையின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னன் - அன்னப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற நவமணி மற்றும் கிருஸ்ணராஜா (இத்தாலி), சர்மிளா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் பாசமிகுந்த தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாராயணன் வீதி,
கோண்டாவில்
கிழக்கு,**

**தகவல்:
குடும்பத்தினர்.
அன்பு மகன்
கிருஸ்ணராஜா (இத்தாலி)**

(CS 31065) GD

## குடமுருட்டிப் பாலத்தில் குடைசாய்ந்த வாகனம்

கிளிநொச்சி,ஜன.23

வேகக்கட்டுப்பாட்டை இழந்து வாகனம், பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து பரந்தன் - பூநகரி வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. குறித்த வீதி ஊடாக கிளிநொச்சி நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, குடமுருட்டி பாலத்தில் மோதிக்குடைசாய்ந்தது.வாகனத்தில் பயணித்த மூவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (சு-27)



மறவன்புலோ கிராம முதியோர் சங்க மீள் உருவாக்கமும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு மற்றும் நோய்க் கொடுப்பனவு மீள்பதிவும் கிராம அலுவலர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 26.12.2025 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் சரவணை குணரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 23.01.2026 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

CS/31036

வடலித்தோட்டம்,
[illegible]
0770[illegible]

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 10 . 1955



இறப்பு 22 . 01 . 2026

### திருமதி இராஜினி சத்தியசீலன்
(வைத்திய கலாநிதி)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. திருமதி இராஜினி சத்தியசீலன் அவர்கள் 22.01.2026 வியாழக்கிழமை அன்று மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின் திருவடியில் இளைப்பாறினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.தம்பிமுத்து (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)- சீதாலட்சுமி (இளைப்பாறிய அதிபர்) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் திரு.திருமதி கனகசபை - அன்னபூரணி தம்பதியரின் மூத்த மருமகளும் Dr. சத்தியசீலன் அவர்களின் அன்பு மனைவியும், பிரியங்கரி (விரிவுரையாளர், யாழ்.மருத்துவபீடம்),பிரதாயினி (வைத்தி யர், யாழ்.போதனா வைத்தியசாலை), மயூரேஷன் (சட்டத்தரணி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் அபிராம் (விரிவுரையாளர்- ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), உஷானந் (வைத்தியர்- தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமியாரும் கிருத்ஞ்ஜா, வர்ஷித், அக்ஷவி, அக் ஷரன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் நந்தகுமார், செந்தில்குமார், காலஞ்சென்ற இரமணி, வசந்தி மற்றும் சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.01.2026 வெள்ளிக்கிழமை அன்று பி.ப.1 மணியளவில் இல. 18, மணற்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று 3 மணியளவில் அவரது பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**தொடர்புகளுக்கு:**
**க.சத்தியசீலன் (கணவர்) 0774638328**
**மயூரேஷன் (மகன்) 076 6649778**
**அபிராம் (மருமகன்) 076 1179928**
**உஷானந் (மருமகன்) 077 2007974**

**தகவல் - குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதக் கடற்றொழிலை ஊக்குவித்தோரைத் தண்டியுங்கள்

ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.23 சட்டவிரோத கரைவலைத் தொழிலுக்கு கடற்றொழிலாளர்களை ஊக்கப்படுத்தியோருக்கு எதிராக மிகக்கடுமையான நடவடிக்கை தேவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அமைச்சர்களும், அதிகாரிகளும் கடற்றொழிலாளர்களைச் சட்டவிரோத கரைவலைத் தொழிலுக்குத் தவறாக ஊக்கப்படுத்தியுள்ளனர். இதனால் தற்போது மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சட்டவிரோத மீன்பிடி முறைகளை ஊக்கு வித்த கடந்தகால அமைச்சர்கள், பொறுப்புக்கூறவேண்டிய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக இந்த அரசு மிகக்கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-246)

### மாகாணத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு குறைவடைந்து வருவதால் மாகாண சபைத் தேர்தல் நடக்காது. அதே வேளை, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன நிச்சயம் ஒன்றிணையும் - என்றார். (அ-ம-44)

### இனப்பரம்பலை...

பதில் பொதுச்செயலரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் உள்ள பாரம்பரிய தமிழ் நிலங்களின் அடையாளத்தை மாற்றியமைக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் மகாவலி திட்டத்தின் துணைத்திட்டமே 'கிவுல் ஓயா'. அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும், இதன் உண்மையான நோக்கம் வடக்கின் எல்லைப் பகுதிகளில்திட்டமிட்டசிங்களக்குடியேற்றங்களை உருவாக்கி, தமிழர்களின் தாயக நிலத்தொடர்பைத் துண்டிப்பதேயாகும். தமிழ் மக்களின் அரசியல் மற்றும் நில உரிமைகளுக்கு விடப்பட்ட நேரடிச் சவாலாகவே கிவுல் ஓயா திட்டம் அமைந்துள்ளது. ஆதலால் இதை நாங்கள் தீர்க்கமாக எதிர்க்கின்றோம்.

கிவுல் ஓயா திட்டத்தில் எமது நிலங்களும், நிலங்களின் மீதான உரிமைகளும் பறிபோகாமல் தடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு எமக்கு உள்ளது. ஆதலால், அனைத்துத் தமிழ் அரசியல்சக்திகளும் இந்தத் திட்டத்துக்கு எதிராக ஓரணியில் திரளவேண்டும்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், மகாவலித் திட்டத்தின் கீழ் வரும் கிவுல் ஓயா திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தியோகபூர்வ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதி திரும்பப் பெறப்பட வேண்டும். இல்லையேல், அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-26-66)

### சட்டமா...

பாதுகாக்க வேண்டும் என ஒரு சாராரும், அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என மற்றுமொரு சாராரும் சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுவருகின்றனர். சட்டமா அதிபரை பாதுகாக்கும் நீதி அமைச்சரும் வீடு செல்ல வேண்டும் எனவும் சிலர் கூறிவருகின்றனர். ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் உரிய இடங்களில் அவற்றைப் பதிவு செய்யலாம். ஏனெனில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். சட்டமா அதிபரை நீக்குவது தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்படவில்லை. குற்றப்பிரேரணை கொண்டுவருவது பற்றியும் கலந்துரையாடப்படவில்லை - என்றார். (அ-ம-44)

### விவசாயத்துறை...

யின் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போதே, இலங்கையின் விவசாயத்துறையில் பல்வேறு ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக உள்ளதாக சீனா அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயத்துக்குத் தேவையான நவீன உபகரணங்கள் சீனாவால் வழங்கப்படவுள்ளன. அத்துடன் தொழில்நுட்ப உதவிகளையும், விலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் முகாமைத்துவ உதவிகளையும் சீன நிபுணர்கள் வழங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் பல்வேறு துறைகளில் சீனா படிப்படியாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே, தற்போது விவசாய ஒத்துழைப்பும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### செவ்வாய்...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ள தாவது:-

வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென்கிழக்குத் திசையில் சிறிய அளவிலான வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியொன்று உருவாகியுள்ளது. இது வடக்கு மற்றும் வடமேற்குத் திசை நோக்கி நகர்கின்றது. இதனால், வடக்கு, கிழக்கு, ஊவா, மத்திய, மேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களுக்குப் பரவலாக மிதமானது முதல் சற்றுக் கனமானது வரையான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதிவரை இந்த மழை வீழ்ச்சி தொடரும்.

நெல் அறுவடைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகளும், நெல் உலர விடும் விவசாயிகளும் இந்த மழை நாள்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது. அத்துடன், எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை முதல் மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு சற்று மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றார். (அ-ம-66)

### தமிழ்...

துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, 'தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம். அதை எவரும் மறுத்துரைக்க முடியாது' என்று கூறியுள்ளார். போர் முடிவடைந்த பின்னர், தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கினேன். தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் சட்ட ஏற்பாடுகளில் கைவைத்தால் அமைச்சரவையில் இருந்து வெளியேறுவேன் என மஹிந்தவிடம் கூறியிருந்தேன். ஏனெனில், அதிகாரப் பகிர்வு இலங்கைக்கு அவசியமானது என்றும் ராஜித தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பகுதிகளை ஆள்வதற்கான அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதற்காக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் காலத்தில் கடும் முயற்சிகளை மேற்கொண்டோம். எனினும், எம்மிடம் பெரும்பான்மைப் பலம் இருக்கவில்லை - என்று முன்னாள் அமைச்சர் ராஜித மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

### விபத்தில்...

முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கடந்த 19ஆம் திகதி சைக்கிளில் பழக்கடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போது அந்த முதியவர் அந்த வழியால் வந்த மோட்டார் சைக்கிள் மீது தடுமாறி விழுந்துள்ளார். இதன் போது, காயமடைந்த அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### மோ.சைக்கிள்கள்...

செயலக உத்தியோகத்தர் மற்றும் பிறிதொருவர் என மூவரே இவ்வாறு படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் மூவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66)

### தேசிய...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தற்போதைய சேவைகள் மற்றும் எதிர்காலத்தில் விரிவுபடுத்த வேண்டிய சேவைகள் தொடர்பில் நாடாளுமன்ற சுகாதார மேற்பார்வைக் குழுவில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடப்பட்டது. இதன் போதே, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாக தரமுயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்போது நிலவும் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பில் விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டது. இதற்குத் தீர்வாக, எதிர்வரும் காலங்களில் தேவையான சுகாதார ஊழியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்பார்வைக் குழு உறுதி அளித்தது. மேலும், மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட தற்போதைய ஆளணியை அதிகரிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக, விரைவில் மேலதிக கலந்துரையாடல்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், மருத்துவமனையில் நிலவும் இடப்பற்றாக்குறை, புதிய விடுதிகள் அமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதன்போது, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் 10 மாடிக் கட்டடத் தொகுதியில் பணிகளை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், மருத்துவமனையின் உபகரணங்கள் கொள்வனவு மற்றும் திருத்தப் பணிகளுக்கான நிதி விடுவிப்பு குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மருத்துவர் நிஹால் அபேசிங்கே தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜயசிங்கே, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன, அமைச்சின் உயர் அதிகாரிகள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவ நிபுணர்கள் மற்றும் யாழ்ப்பாண மருத்துவ பீடாதிபதி குழுவினர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

### கிவுல்ஓயா...

கட்டுமானத் திட்டத்துக்காக 2.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ள நிலையில், இதனைச் செயற்படுத்துவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு தமிழ்த் தரப்புகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள நிலையிலேயே, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று விசேட ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ச-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 18 இலட்சம் பேரின் வேலைகளுக்கு 'ஏ.ஐ.' ஆப்பு?

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்!

**கொழும்பு, ஜன.23**
**இலங்கையில் பணிபுரியும் மக்களில் சுமார் 18.3 இலட்சம் பேர் நவீன செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் நேரடித் தாக்கத்துக்கு ஆளாகக்கூடும் எனப் புதிய ஆய்வு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

2023ஆம் ஆண்டின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2025இல் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு, நாட்டின் எதிர்கால வேலைவாய்ப்புச் சந்தை குறித்த முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப மாற்றத்தினால் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரே அதிக சவால்களைச் சந்திக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அலுவலக உதவியாளர்கள், நிபுணத்துவப் பணியாளர்கள், தொழில்முறை வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் ஏ.ஐ. இன் தாக்கத்தை எதிர்கொள்கின்றனர். உடல் உழைப்பு மற்றும் நேரடிக் களப் பணிகள் சார்ந்த துறைகளில் ஏ.ஐ. இன் தாக்கம் மிகக் குறைவாகவே இருக்கும். ஏ.ஐ. தொழில்நுட்பத்தைக் கையாள்வதற்கான போதிய பயிற்சியோ அல்லது வசதியோ இலங்கையின் தற்போதைய பணிச்சூழலில் குறைவாக இருப்பதாக இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. தாக்கத்துக்கு உள்ளாகக்கூடிய 1.83 மில்லியன் ஊழியர்களில், வெறும் 26.3 சதவீதம் பேர் மட்டுமே டிஜிற்றல் கல்வியறிவு பெற்றவர்களாகவும், கணினி மற்றும் இணைய வசதி கொண்ட அலுவலகங்களில் பணிபுரிபவர்களாகவும் உள்ளனர். மீதமுள்ள பெரும்பான்மையான ஊழியர்களுக்கு இந்த நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான போதிய வாய்ப்புகள் இல்லை என்பது ஒரு பெரும் சவாலாகப் பார்க்கப்படுகிறது. ஏ.ஐ. என்பது தரவுகளைப் பகுப்பாய்வு செய்வது மட்டுமல்லாமல், புதிய உள்ளடக்கங்களை உருவாக்கும் திறன் கொண்டது. இது தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவும் அதேவேளை, போதிய தயார்நிலை இல்லாவிடில் வேலைவாய்ப்புச் சந்தையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.23
இந்து தர்மாசிரியர் ச.வாகீசன் தொகுத்த சைவநெறி அலகு ரீதியான வினாவிடை (தரம்-1 முதல் தரம்-5 வரை), சைவநெறி அலகு ரீதியான பல்வேறு வினாக்கள் (தரம்-6 முதல் தரம்-11 வரை) ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க தமிழவேள் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் க.இ.கந்தசுவாமி ஞாபகார்த்த மண்டபத்தில் இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர் ந.தவசோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.


நிகழ்வில் இணுவில் தென்மேற்குக் கிராம அலுவலர் ஆ.ரஜீவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-66)



திருநெல்வேலி சமுர்த்தி வங்கியின் தைப்பொங்கல் விழா நேற்று இடம்பெற்றது. நல்லூர்ப் பிரதேச செயலர் ஏ.யசோதா தலைமையில் நடைபெற்ற விழாவில், திருநெல்வேலி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் என்.உதயதரன், திருநெல்வேலி சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையினர், கிராமமட்ட அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)

## பொலிஸாருக்கு கையூட்டு: ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஜன. 23
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன் பகுதியில், பொலிஸாருக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். டிப்பர் வாகனமொன்றின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## புல்லாவெளி செபஸ்தியார் ஆலயப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.23
வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கட்டைக்காட்டுப் பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் யாழ். மறைமாவட்ட முதன்மைக் குருக்களில் ஒருவரான அருட்தந்தை எட்வின் நாதனால் பெருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பெருவிழாவில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ச-41-27)



கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 6க்கான புதிய மாணவர்களை வரவேற்கும், கால்கோல்விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (க-17)

மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்.
கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு.
யாழ். மாவட்டத்திற்கு 65,000 இருந்து...
மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.
தொடர்புகளுக்கு
076 324 9977
(CS 31042) GD

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org